ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2338/60 - 2023 ජූනි මස 30 වැනි සිකුරාදා - 2023.06.30
*2338/60 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்

**யாத்திரை கட்டளை (அதிகாரம் 175)**

*சபரகமுவ மஹா சமன் தேவாலயத்தின் எசல விழா – 2023*

மேலே குறிப்பிடப்பட்ட உற்சவம் 2023, யூலை மாதம் 16 ஆந் திகதி ஆரம்பித்து 2023, ஓகத்து மாதம் 02 ஆந் திகதி நிறைவடையும் எனப் பொது மக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

யாத்திரைக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாட்டிற்கமைய கீழே குறிப்பிடப்பட்டுள்ள வர்த்தமானி கட்டளைச் சட்டம் உற்சவ காலத்தில் நடைமுறையில் இருக்கும் என்பது பொது மக்களின் கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்றது.

*2019, நவெம்பர் மாதம் 26 ஆந் திகதியின் வர்த்தமானி இல. 2151/21*

*2020, யூலை மாதம் 17 ஆந் திகதியின் வர்த்தமானி இல. 2184/49*

*2021, ஓகத்து மாதம் 30 ஆந் திகதியின் வர்த்தமானி இல. 2243/8*

*2022, ஓகத்து மாதம் 18 ஆந் திகதியின் வர்த்தமானி இல. 2293/45*

**லசந்த குணரத்ன,**
மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர்,
சபரகமுவ மஹா சமன் தேவாலய எசல உற்சவ
முகாம் பொறுப்பதிகாரி.

இரத்தினபுரி மாவட்ட செயலகம்,
*2023, யூன் 30.*

1A - G 39806 — 07 (2023/06)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சபரகமுவ மஹா சமன் தேவாலயத்தின் எசல விழா - 2023**

2019, நவெம்பர் மாதம் 26 ஆந் திகதியின் வர்த்தமானி இல. 2151/21, 2020, யூலை மாதம் 17 ஆந் திகதியின் வர்த்தமானி இல. 2184/49, 2021, ஓகத்து மாதம் 30 ஆந் திகதியின் வர்த்தமானி இல. 2243/8, 2022, ஓகத்து மாதம் 18 ஆந் திகதியின் வர்த்தமானி இல. 2293/45 போன்ற வர்த்தமானிகளில் வெளியிடப்பட்டுள்ள யாத்திரை கட்டளைச் சட்டத்தின் விதிமுறைகள் தொடர்பில் மக்களின் கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்றது. அவ்விதிமுறைகள் தொடர்பிலான அறிவுறுத்தல்கள் கீழ்வருமாறு :-

**1. பெரஹெர நடைபெறும் காலப்பகுதி -**

- இந்த ஆண்டு சபரகமுவ மஹா சமன் தேவாலயத்தின் எசல விழா 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 16 ஆந் திகதி தொடங்கி ஓகத்து மாதம் 02 ஆந் திகதி நடைபெறும் நீர் வெட்டு விழா மற்றும் பிற்பகல் ஊர்வலத்துடன் நிறைவடையும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| - | இரவு முழுவதும் பிரித் வழிபாட்டு நிகழ்வு | 16.07.2023 |
| - | பிக்குமார்களுக்கு தானம் வழங்கல் | 17.07.2023 |
| - | கப் நடும் விழா | 18.07.2023 |
| - | கடைகள் ஏலம் விடுதல் | 18.07.2023 |
| - | கும்பல் பெரஹெர வைபவம் | 18.07.2023 தொடக்கம் 22.07.2023 |
| - | பெரஹெர உற்சவத்தின் தெரு அணிவகுப்பு | 23.07.2023 தொடக்கம் 27.07.2023 |
| - | ரந்தோலி பெரஹெர வைபவம் | 28.07.2023 தொடக்கம் 01.08.2023 |
| - | நீர் வெட்டு வைபவம் | 02.08.2023 |

**2. முகாம் பகுதி -**

- வடக்கின் பரவனி அதிகாரிகளின் குடியிருப்பு, வாகன தரிப்பிடம், சீமெந்து வடிகாலின் எல்லையினை வரையறுக்கும் விற்பனைக் கடைகள் மற்றும் வாகனத் தரிப்பிட நுழைவுச்சாலை, தெற்கே தென்னகேவத்த மற்றும் களு கங்கை, கிழக்கே இரத்தினபுரி பாணந்துரை பிரதான சாலை மற்றும் மேற்கில் தேவாலயத்திற்குச் சொந்தமான மகா உயன்வத்த ஆகியவற்றிற்கு இடைப்பட்ட நிலப்பகுதி எசல விழா நடைபெறும் பகுதியாகும்.

**3. வாகனம்**

3.1. எனது அனுமதி அல்லது அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் அனுமதியின்றி மோட்டார் வாகனங்கள், மிதிவண்டிகள் மற்றும் தள்ளுவண்டிகள் குறித்த வாகனத் தரிப்பிட பகுதியில் அல்லாது உற்சவ பிரதேசத்தில் அல்லது வேறு எவ்விடத்திலும் நிறுத்துவதற்கோ அல்லது வளாகத்திற்குள் உள் நுழைவதற்கோ தடை விதிக்கப்பட்டுள்ளது.

3.2 இரத்தினபுரி - பாணந்துரை பிரதான சாலையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பிரதான வாஹல்கட வழியாக தேவாலயத்தின் புனித பகுதிக்கு வாகனங்கள் நுழைதல் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

**4. கட்டிடங்களின் கட்டுமானம்**

4.1 என்னுடைய அல்லது அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் எழுத்துபூர்வ அனுமதியின்றி 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 16 ஆந் திகதி முதல் ஓகத்து 02 ஆந் திகதி வரை முகாம் பகுதியில் எந்தவொரு கொட்டகை மற்றும் தற்காலிக அல்லது நிரந்தர கட்டுமானம் அமைத்தல் அல்லது தற்போது உள்ள கட்டிடத்தில் புதிய பகுதிகள் இணைக்கப்படக் கூடாது.

4.2 எவ்வாறாயினும், எனது அல்லது அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் உத்தரவுகளில் ஏதேனும் ஒரு உத்தரவை அமுல்படுத்தும் நோக்கத்திற்காக முகாம் பகுதிக்குள் எந்தவொரு இடத்திற்கோ அல்லது பிரதேசத்திற்கோ உள்நுழைவதற்கு மற்றும் ஏதேனும் ஒரு விளம்பரம் அல்லது பெயர்ப்பலகையினை காட்சிப்படுத்தும் நோக்கத்திற்காக முகாம் பகுதிக்குள் ஏதாவது ஓரிடத்தில் அல்லது பிரதேசத்தில் ஒரு தூண் அமைக்க அல்லது கட்டுமானம் அமைக்க அனுமதிக்கப்படும்.

5. **ஊர்வலத்திற்கு புத்த பூஜை நடாத்தல் -**

*5.1* நீர் வெட்டு ஊர்வலத்தில் புத்த பூஜை நடாத்துவதற்காக ஊர்வலத்தை நிறுத்துவதற்கு அனுமதி உள்ளது.

6. **சுகாதாரம் -**

*6.1* தொற்று நோய் அல்லது நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்ட எந்தவொரு நபரும் முகாம் பகுதியில் அனுமதிக்கப்படக்கூடாது மற்றும் நாட்டில் தற்போதைய சுகாதார வழிகாட்டுதல்களை பின்பற்றல் அவசியமாகும்.

7. **வியாபாரம் -**

*7.1* எந்தவொரு நபரும், என்னால் அல்லது அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் அனுமதியின்றி உற்சவ வளாகத்தில் டிக்கெட், கொடிகள் விற்பனை செய்தல் அல்லது வேறு எந்த விடயம் தொடர்பாகவும் பணம் சேகரித்தலில் ஈடுபடக் கூடாது. ஊர்வலம் நடைபெறும் காலத்தில் தேவாலய பூமியில் மற்றும் இவ் வளாக சுற்றுப்புறத்தில் புகையிலை சார்ந்த பொருட்கள் மற்றும் போதை மருந்து விற்பனை செய்தல், பயன்படுத்துதல் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

*7.2* உற்சவ வளாகத்தில் தற்போது காணப்படும் பூக்கள், பூசைப்பொருட்கள் விற்பனை நிலையங்கள் மற்றும் கொட்டாம்பை அருகில் இருந்து கெட்டலியம்பல்லவிற்கு செல்லும் பாதை வரையில் பிரதான வீதியின் இருமருங்கிலும் காணப்படும் கடைகள் பெரஹெர நடாத்தப்படும் காலத்தில் நாட்டின் தற்போதைய சுகாதார அறிவுரைகளுக்கு அமைய நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

*7.3* முகாம் பிரதேசத்தில் நுழைவு வீதியின் இரு மருங்கிலும் தற்பொழுது காணப்படும் பூ, பூஜை பொருட்கள் விற்பனை நிலையங்களை நிறுவுதல், நடாத்துதல், விற்னை செய்தலில் ஈடுபடக் கூடாது.

*7.4* அனைத்து விற்பனை நிலையங்களிலும் கழிவுப்பொருட்கள் சேகரிக்கும் கொள்கலன்கள் காணப்படுதலும், கழிவுகள் கொள்கலன்களில் இடப்படுதலும் வேண்டும்.

*7.5* விற்பனைக்கான பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களை ஈக்களிலிருந்து பாதுகாக்கும் வகையில் மூடப்பட்ட பெட்டிகளில் வைக்கப்பட வேண்டும்.

8. **யாசகர்கள் -**

பிச்சை எடுப்பதற்காக அல்லது தொண்டு செய்வதற்காக புனித பகுதிக்கு வெளியே ஒதுக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட இடங்களைத் தவிர, முகாம் பகுதிக்குள் எந்தவொரு நபருக்கும் பணமாகவோ அல்லது வேறு எந்த வகையிலோ எப்பொருளையும் புண்ணிய நோக்கத்திற்காக கொடுக்கவோ, விநியோகிக்கவோ அனுமதிக்கப்பட மாட்டாது.

**லசந்த குணரத்ன,**
மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர்,
சபரகமுவ மஹா சமன் தேவாலய எசல உற்சவ
முகாம் பொறுப்பதிகாரி.

இரத்தினபுரி மாவட்ட செயலகம்,
*2023, யூலை 30.*

EOG *06 - 0248*